அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 13/94

எனது இல. 1/01/06/01
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு. 07.
1994, ஏப்ரல் மாதம் 26ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

அரச பணியாளர்களின் நலன்புரி மற்றும் விளையாட்டுத்துறை நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்

---

அரச பணியாளர்களின் உடல் உள செயற்பாட்டை விளையாட்டு மற்றும் விநோதமான நடவடிக்கைகளின் மூலம் முன்னேற்ற வேண்டுமென்று மாண்புமிகு அரசாங்க நிருவாக அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். அரச உத்தியோகத்தர்களின் விளையாட்டு அமைப்புக்களை மீள இயங்கச் செய்யும் நோக்கத்துடன் பின்வரும் முறையில் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

(1) அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/அலுவலகங்கள் மட்டத்திலான விளையாட்டு கழகங்களை அமைத்தல்.

(2) பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள அத்தகைய விளையாட்டுக் கழகங்களை ஒன்றுசேர்த்துப் பிரதேச விளையாட்டு கழகங்களை அமைத்தல்.

(3) பிரதேச விளையாட்டு சங்க உறுப்பினர்களிடையேயிருந்து தெரிவு செய்து மாவட்ட விளையாட்டு சங்கங்களை அமைத்தல்.

(4) மாவட்ட விளையாட்டு சங்கங்களின் உறுப்பினர்களிடையே தெரிவு செய்து மாகாண விளையாட்டு சங்கங்களை அமைத்தல்.

(5) தேசிய மட்டத்திலான அரசாங்க சேவை விளையாட்டு சங்கங்களில் மாவட்ட/மாகாண விளையாட்டு சங்கங்கள் பிரதிநிதித்துவம் வகித்தல்.

03. இந்த விளையாட்டு கழகங்களின்/சங்கங்களின் அமைப்பாளர்கள் பின்வருமாறு அமைய வேண்டும்:-

| | அமைப்பாளர் |
|---|---|
| I. அமைச்சுகள்/திணைக்களங்கள்/அலுவலகங்களில் அரசாங்க சேவை விளையாட்டுக் கழகங்கள். | செயலாளர்/திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் |
| II. பிரதேச மட்டத்திலான அரச சேவை விளையாட்டுக் கழகங்கள்/சங்கங்கள் | பிரதேசச் செயலாளர் |
| III. மாவட்ட மட்டத்திலான அரச சேவை விளையாட்டு அமைப்புக்களின் குழுக்கள்/சங்கங்கள் | மாவட்டச் செயலாளர் |
| IV. மாகாண மட்டத்திலான அரச சேவை விளையாட்டுக் கழகங்கள்/சங்கங்கள் | பிரதான செயலாளர் |
| V. தேசிய மட்டத்திலான அரச சேவைகள் விளையாட்டுச் சங்கங்கள் | அரசாங்க நிருவாக அமைச்சுச் செயலாளர் |

04. அமைப்பாளர்கள் தங்களுக்குரிய விளையாட்டுகழகங்களை/சங்கங்களை ஆரம்பிப்பதற்கு வழிகாட்ட வேண்டும்.

05. விளையாட்டுகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளில் அரச பணியாளர்கள் அனைவரினதும் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காகவும் இத்தகைய நடவடிக்கைகளைக் கூட்டிணைப்பதற்காக அமைப்பாளர்கள் தனிப்பட்ட கவனம் செலுத்துவது முக்கியமாகும். அதற்காகச் செய்ய வேண்டிய செயற்பாடுகள் சில கீழ்க் காட்டப்பட்டுள்ளன.

1. விளையாட்டுக் கழகங்களுக்குள்ளேயும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயும் போட்டிகளை நடாத்துவதற்குரிய ஒரு நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல்.
2. விளையாட்டுகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்காக நிதி சேகரித்தல்.
3. விளையாட்டுகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் பற்றி வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல்.
4. இத்தகைய நடவடிக்கைகளுக்குத் தேவையான கருத்துப் பரப்புகை மேற்கொள்ளல்.

06. விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பிரதேச விளையாட்டுச் சங்கங்கள் அமைப்பது பற்றிய ஆலோசனைகள் "ஏ" இணைப்பில் குறிப்பிட்டுள்ளதுடன் பிரதேச விளையாட்டுச் சங்கங்களை அமைப்பதற்கு உதவக் கூடியதான வரைவுச் சட்டத்தின் மாதிரியொன்று "பீ" மற்றும் "சீ" இணைப்புகளாக இணைக்கப்பட்டு உள்ளன.

06.1 உரிய முறையில் அமைக்கப்படும் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சங்கங்களின் பெயர்பதிவேடொன்று இந்த அமைச்சில் பேணப்படும்.

06.2 பல அலுவலகங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கும் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் நலன்புரி சங்கங்கள் புதிய அமைப்பு முறைக்கேற்பப் புனரமைக்கப்பட வேண்டும். இந் நிகழ்ச்சித் திட்டம் சுறுசுறுப்புடன் செயற்படும் விளையாட்டு ஆர்வலர்களை உருவாக்குவதுடன், அரச பணியாளர்களின் நலன்புரி தேவைகளையும் நிறைவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

07. விளையாட்டு சங்கங்களை அமைப்பது தொடர்பாக பிரதேசச் செயலகங்களுக்கு இணைக்கப்பட்டிருக்கும் விளையாட்டு உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

08. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டிலிருந்து நிதி உதவி வழங்கப்படுவதுடன், அத்தகைய நிதியைச் செலவு செய்ய வேண்டிய முறை பற்றியும் தெளிவுபடுத்தப்படும்.

09. அரச சேவை விளையாட்டு அமைப்புக்களின் கணக்குகள் அமைப்பாளரால் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு பிரதிநிதியால் பரிசோதனை செய்யப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர் , அரசாங்கக் கணக்காளர் அல்லது கணக்காய்வு அதிகாரி ஒருவரால் வருடாந்த கணக்குக் கூற்று உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10. பிரதேச/மாவட்ட விளையாட்டுச் சங்கங்களின் கணக்குகளும் மேற்கூறிய படி உறுதிப்படுத்தப்பட்டுப் பிரதேசச் செயலாளர்/மாவட்டச் செயலாளர்களால் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். வழங்கப்பட்ட நிதி உரிய முறையில் கணக்கில் இடப்பட்டிருப்பது தொடர்பில் அமைப்பாளர்கள் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

11. முறைப்படி கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்கள் ஒவ்வொரு சங்கத்தினாலும் நிதி ஆண்டு முடிவடைந்த 3 மாதங்களுக்குள் அமைப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

கணக்குக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதைத் தாமதப்படுத்தும் அல்லது கணக்காய்வுகளின் விசாரணைக்குட்படுத்தப்பட்ட விளையாட்டுச் சங்கங்களுக்கு முறையான நிலைமை நிலை நாட்டப்படும் வரை, அத்தகைய கால எல்லைக்கு அவற்றுக்கு நிதி வழங்கப்படமாட்டாது.

12. பிரதேசச் செயலாளர்கள் ஏற்கனவே விபரங்களை அனுப்பாவிடின் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்கள் பற்றிய விபரங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் தாமதமின்றி எனக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஒப்பம்: வை. பீ. புஸ்ஸெதெனிய
செயலாளர்
அரசாங்க நிருவாக அமைச்சு

பிரதிகள்.

1. கணக்காய்வாளர் அதிபதி – தகவலுக்கு.
2. செயலாளர், உள்நாட்டலுவல்கள், மாகாணச் சபைகள் – தகவலுக்காக
3. பிரதான செயலாளர், விளையாட்டு விடயப் பொறுப்பு செயலாளர் – தகவலுக்காகவும் தேவையான ஒத்துழைப்புக்காகவும்
4. மாகாண விளையாட்டு அமைச்சுக்களின் செயலாளர்கள்.

## அரச சேவை விளையாட்டு கழக அமைப்புகள்

அரசாங்க சேவை விளையாட்டுச் சங்கங்கள் முதலியவற்றை அமைப்பதற்கான ஆலோசனைகள் :

தத்தமது திணைக்களங்களின் அரச உத்தியோகத்தர்களுக்கான விளையாட்டுச் சங்கங்களை அமைக்குமாறு வேண்டுவதற்காக அரசாங்கத்தின் பிராந்திய நிறுவனங்களைச் சேர்ந்த தலைவர்களின்/உறுப்பினர்களின் கூட்டமொன்று நடத்த வேண்டியுள்ளது. போதிய அளவில் உத்தியோகத்தர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் பல திணைக்களங்களைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்கள் ஒன்று சேர்ந்து ஒரு சங்கத்தினை அமைத்துக் கொள்ள முடியும். (இது 1994.06.30ஆம் திகதிக்கு முன்பு செய்யப்பட வேண்டும்.) ஐக்கியத்துடன் நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கான வரைவு சட்டமொன்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. வேண்டியவாறு திருத்த முடியும் சங்கத்தை பதிவு செய்வதற்காக சங்கத்தின் சட்ட நடவடிக்கை குறிப்பு, உத்தியோகத்தர்கள் பட்டியல் மற்றும் ஆரம்பக் கூட்ட அறிக்கை முதலியவற்றை அமைச்சுக்கு அனுப்புதல் வேண்டும்.

## அரசாங்க சேவை பிராந்திய விளையாட்டுச் சங்கங்களை அமைத்தல்.

சங்கத்தை ஆரம்பித்த பின்பு அரசாங்க சேவை பிராந்திய விளையாட்டுச் சங்கங்கள் 94.07.31ஆம் திகதிக்குள் அமைப்பதற்காக தற்போது உள்ள சங்கங்கள் உட்பட அனைத்துச் சங்கங்களின் உறுப்பினர்களையும் அழைக்க வேண்டும். சட்ட நடவடிக்கை குறிப்பு வரைவு இணைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தின் போது பிராந்திய விளையாட்டு உத்தியோகத்தர்கள் விளையாட்டுகள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் சுகாதாரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களைப் போன்ற தகைமையுடைய உத்தியோகத்தர்களையும் குறித்த தகைமைகளையும் அனுபவத்தையுடைய ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களையும் தொண்டர் உத்தியோகத்தர்களாக முக்கியமான செயற்பாடுகளை புரிவதற்காக பங்கெடுப்பதில் ஊக்குவித்தல் வேண்டும்.

சங்கத்தின் சட்ட நடவடிக்கை அறிக்கை மற்றும் ஆரம்பக் கூட்டத்தின் ஒரு அறிக்கையும் உத்தியோகத்தர்கள் பற்றிய ஒரு அறிக்கையும் பிரதேசச் செயலாளரால் 94.08.31ஆந் திகதிக்கு முன்னதாக அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## செயற்பாட்டுக் குறிப்பு

ஆரம்ப மட்டத்திலான சங்கங்களினால் அம்மட்டத்தின் உத்தியோகத்தர்களின் எண்ணக் கருத்துக்களுக்கு அமைவாக ஏற்பாடு செய்ய வேண்டிய விளையாட்டு விநோத நடவடிக் -கைகள் பற்றி தீர்மானித்தல் வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளில் பங்கெடுப்பதற் காக உத்தியோகத்தர்களின் குடும்பங்களின் உறுப்பினர்களையும் பகுதியில் ஓய்வு பெற்றவர்களையும் ஊக்குவித்தல் வேண்டும். எவ்வாறாயினும் மாவட்ட மாகாண, தேசிய மட்டத்திலான சந்தர்ப்பங்களில் சேவையில் இருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டியது. 35 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்குமான போட்டிகள் 5 வருட...... அடிப்படையில் ஒழுங்கு செய்ய வேண்டும். உதாரணம்: 35-39, 40-44, 45-49 என்ற முறையில். பிராந்திய மட்டத்திலான போட்டிகள் ஏப்ரல் மார்கத்திலும் மாவட்ட/மாகாண மட்டத்திலான ...

நிதி

அடிப்படையாக விளையாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்காக தற்போது
நிதி ஒதுக்கீடு செய்யப்படாத ஒவ்வொரு பிரதேசச்செயலகங்களிலான விளையாட்டுச்
சங்கங்களுக்கும் நலன்புரி செலவுத் தலைப்பின் கீழ் 1500/-ரூபா நிதியை ஒதுக்கீடு
செய்வதற்கான அனுமதி கௌரவ பொது நிருவாக அமைச்சரால் வழங்கப்பட்டுள்ளது.
சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இத்தகைய நிதியம் வழங்கப்படும். வேண்டிய சந்
தர்ப்பங்களில் வேண்டியவாறு பிரதேச மட்டத்தில் நிதியை மேலும் சேகரித்துக் கொள்ள
முடியும்.

அரச சேவைகள் பிராந்திய/மாவட்ட விளையாட்டு இயக்கங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள்
அச்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கவனத்திற் கொள்ளப்படும்.

## பொருட்களும் ஏனைய வசதிகளும்
வசதிகள்

அரச நிறுவனங்களிலுள்ள/பொது மக்களிடையிலும் ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கம்
ஆலோசனை வழங்கியுள்ளது. இக் கொள்கை தீர்மானத்தின்படி விளையாட்டு மற்றும்
உல்லாச நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்காக அரச உத்தியோகத்தர்களுக்கும்,
அவர்களின் குடும்பத்தினர்களுக்கும் ஓய்வு பெற்றவர்களுக்கும் இயன்ற சகல சந்தர்ப்பங்
களிலும் பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்கள் முதலிய நிலையங்களுக்கு அளிக்கப்
பட்டுள்ள வசதிகளை வழங்க வேண்டும்.

பிரதேசச் செயலாளர்கள் அது போன்ற அனைத்து வசதிகளைப் பற்றிய ஒரு பதி
வேட்டினை கிராம உத்தியோகத்தர்களின் மூலம் தயாரிக்க வேண்டியதுடன், அதன்படி
பிராந்திய அரச சேவைகள் விளையாட்டுச் சங்கங்களுக்கு அவைகளின் மூலமாக பயன்களை
பெற முடியும்.

## பொது ஜன தகவற்றுறை

அனைத்து அரச சேவர்களும் செயற்பாட்டுடன் இந்த விளையாட்டுகள் மற்றும் உல்லாச
மான நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொள்வதை ஊக்குவிப்பதற்காகவும் அரச உத்தி
யோகத்தர்கள் அவர்களின் குடும்பத்தின் உறுப்பினர்களையும் ஓய்வு பெற்றவர்களையும்
விளையாட்டுகளில் செயற்படக் கூடியமுறையில் கலந்து கொள்ளக் கூடியதாக இவ்விளை
யாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளையும்
கதிரொளி மற்றும் அச்சிடப்பட்ட பொதுசன தகவற்றுறைகளின் மூலம் பகிரங்கப்படுத்துதல்
வேண்டும்.

அரச சேவையின் போது வெற்றிகரமாக செயற்படுவதில் விளையாட்டானது எவ்வகையில்
உதவுகிறது என்பது பற்றி அரச சேவகர்களுக்கு அறிவூட்டுதல் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்
பொது நோக்கமானதால் இது முக்கிய இடத்தைக் கொண்டுள்ளது.

13/94 இணைப்பு 'ஆ'

## விளையாட்டுக் கழகத்தின் செயற்பாட்டுக் குறிப்பு

1. பெயர் :-

இவ் விளையாட்டுக் கழகத்தின் பெயரானது :- விளையாட்டுக் கழகம் என அழைக்கப்படுகின்றது. (எதிர்காலத்தில் கழகம் என அழைக்கப்படும்)

2. முகவரி :-

கழகத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரி........................ ஆகும்.

3. <u>நோக்கங்கள்</u>

1. <u>விளையாட்டுகளில் பங்கெடுப்பு</u>

இதன் மூலம் அரச உத்தியோகத்தர்களினதும் ஓய்வு பெறப்பட்டவர்களினதும், அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களினதும் உடல் உள சுகாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதுடன் விளையாட்டுத் திறனை முன்னேற்றி அவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கப்படும்.

11. ஏனைய விளையாட்டுக் கழகங்களுக்கும் இவ்விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்தல்.

111. கழகத்து உறுப்பினர்களின் விளையாட்டு திறமைகளுக்கு உதவி அளித்தல்

1V. விளையாட்டுப் போட்டிகளுக்காக விளையாட்டுக் குழுகளை அமைத்தல்.

V. விளையாட்டு அமைப்பாளர், பயிற்சி பெறுபவர் மற்றும் உத்தியோகத்தர்களுக்காக பாடநெறிகளை ஒழுங்கு செய்தல்.

V1. கழகத்தின் தேவைக்காக அசைவுறு அசைவற்ற சொத்துகளை கொள்வனவு செய்வதற்கும், வாடகைக்கு எடுக்கவும் பரிசாகக் கொள்ளவும் சுவிகரித்துக் கொள்ளவும் அசைவுறு சொத்துகளை மட்டும் தேவைப்படுமிடத்து விற்பனவு செய்யவும் நடவடிக்கை எடுத்தல்.

V11. கழகத்தின் தேவைக்கேற்ப மற்றைய நிறுவனங்கள் மற்றும் கழகங்களினால் வழங்கப்படும் கடன்களையும் நிதி உதவிகளையும் பெறல்.

4. <u>அங்கத்துவம்</u>

கழகத்தின் அங்கத்துவம் அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கும் ஓய்வு பெற்றோருக்கும் வழங்கப்படும். சந்தாப் பணத்தை முழுமையாகச் செலுத்தப்பட்டு நிறைவேற்றுக் குழுவின் அனுமதித்த பின் அவர்களுக்கு அங்கத்துவம் வழங்கப்படும். வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது ஒரு வாக்கை மட்டும் அவர்கள் பாவிக்கலாம். உரிய விண்ணப்பப்பத்திரத்தை பூர்த்தி செய்து கட்டணங்களை செலுத்திய பின்னர் அவர்கள் அங்கத்துவத்தை கோர முடியும்.

5. <u>கட்டணங்கள்</u>

அனைத்து அங்கத்தவர்களும் வருடாந்த சந்தாப் பணமாக ரூபா........ஐ செலுத்தி அங்கத்துவத்தை பெறப்பட வேண்டும். இது மாதாந்தம் ரூபா..... ஆகக் கூடும்.

6. <u>நிதி ஆண்டு</u>

கழகத்தின் நிதி ஆண்டு சனவரி 01ஆந் திகதி முதல் டிசெம்பர் 31ஆந் திகதி வரையான காலத்திற்குட்பட்டிருக்கும்.

7. நிறைவேற்றுக்குழுக்கள்

(அ) கழகத்தின் நிறைவேற்றுக் குழுவானது பின்வரும் உத்தியோகத்தர்களை கொண்டிருக்கும். தலைவர், உபதலைவர் 03 பேர் செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர், உதவிப் பொருளாளர், குறிப்பாளர் குழு உறுப்பினர்கள் 10 பேர்.

(ஆ) மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக கணக்காய்வாளர் -கள் இரண்டு பேர் அங்கத்தவர்களாகதவர்களிலிருந்து தெரிவு செய்யப் படுவார்கள்.

(இ) அனைத்து உத்தியோகத்தர்களும் வருடாந்த பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவார்கள். தொடர்ந்து 03 வருடங்களுக்கு பதவிகளை வகிப்ப தற்கு உத்தியோகத்தர்களுக்கு உரித்துண்டு. பதவிகளில் ஏற்படும் வெற்றி டங்கள் வருடாந்த பொதுக்கூட்டங்கள் இரண்டிற்கிடையில் உறுப்பினர்களிலி ருந்து தெரிவு செய்யப்பட்டு நியமிப்பதுடன் அவ்வாறு செய்யும் அதிகாரம் நிறைவேற்றுக் குழுவுக்கு உண்டு.

8. ஆலோசகர் சபை

தலைமை ஆலோசகர் மற்றும் உதவி ஆலோசகர்கள் மூவரை வருடாந்த பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

9. கூட்டம்

(அ) வருடாந்த பொதுக் கூட்டம்

நிதி ஆண்டு முடிந்து 03 மாதங்களில் வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெற வேண்டும்.

1. முன் ஆண்டின் வருடாந்த பொதுக் கூட்ட அறிக்கையை சமர்ப்பித்தலும் சம்மதித்துக் கொள்ளலும்.
2. வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்தலும் சம்மதித்துக் கொள்ளலும்.
3. வருடாந்த கணக்குப் பிரகடனம் மற்றும் ஐந்தொகையை சமர்ப்பித் தலும் சம்மதித்துக் கொள்ளலும்.
4. நிறைவேற்றுக் குழுக்களுக்கும் ஏனைய குழுக்களுக்கும் உறுப்பினர்களை நியமித்தல்.
5. கணக்காய்வாளர்களை நியமித்தல்.
6. ஆலோசகர் மற்றும் உதவி ஆலோசகர்களை நியமித்தல்.

(ஆ) நிறைவேற்றுக் குழுக் கூட்டம்

நிறைவேற்றுக் குழு மாதம் ஒரு முறை கூட வேண்டியதுடன் கழகத்தின் நாளாந்த நடவடிக்கைகளில் பொறுப்பாக இருத்தல் வேண்டும். எல்லா அம்சங்களாலும் உறுப்பினர்களை கூட்டுவதிலும் இதில் வரும் ஏற்பாடுகளை அளிப்பது தொடர்பிலும் இக்குழுவானது பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

( ) துணைக்குழு

நிறைவேற்றுக் குழுவுக்கு துணைக்குழுவை நியமிக்க முடியும். அத்தோடு துணைக்குழு வானது உறுப்பினர்களைக் கொண்டு அமைந்திருத்தல் வேண்டும். அதே போன்று ஒவ்வொரு விளையாட்டுக்குமான துணைக்குழுவொன்றாவது இருத்தலும் வேண்டும்.

## 10. கூட்டங்களை நடாத்துகை

(அ) வருடாந்த பொதுக்கூட்டத்தை நடாத்தும் இடமும்திகதியும் நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

(ஆ) மேலும் நிறைவேற்றுக் குழுவும் துணைக்குழுவும் கூடுகின்ற இடமும் திகதியும் ஒவ்வொரு குழுவினாலும், தீர்மானிக்கப்படும்.

(இ) ஒவ்வொரு கூட்டத்தினதும் நிறைவெண்ணானது மொத்த உறுப்பினர் களில் 30% விதமாகும்.

(ஈ) நிறைவேற்றுக் குழுவின் தீர்மானத்தின்படி அல்லது உறுப்பினர்களில் 1/3 பிரிவினர் எழுத்து மூலமாக கோரிய போது பொதுக்கூட்டம் கூடுதல் வேண்டும். பொதுக் கூட்டம் கூடுவதற்கு உத்தேசித்த திகதிக்கு 06 வாரங்களுக்கு முன் இத்தகைய வேண்டுகோளை நிறைவேற்றுக் குழுவின் செயலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு குறைந்த பட்சம் ஒரு மாத காலமும் மற்றக் கூட்டங்களுக்கு ஒரு வார காலமும் வழங்கப்பட வேண்டும்.

## 11. செயற்பாட்டுக் குறிப்பை திருத்துதல்

இக் குறிப்பில் அடங்கியுள்ள ஏதேனும் ஒரு பிரிவு அல்லது பிரிவுகள் உறுப்பினர் களால் அனுமதிக்கப்பட்டு பிரேரணைகள் சம்மதிக்கப்பட்ட பின் திருத்தம் செய் யப்படலாம். உறுப்பினர்கள் ஏதேனும் ஒன்றை திருத்துவதாயின் வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது அல்லது குறிப்பிட்ட ஒரு இடத்தில் பொதுக் கூட்டத்தைக் கூடி மாற்றங்களை சமர்ப்பித்தல் வேண்டும். செயற்பாட்டுக் குறிப் புடன் சம்பந்தப்படாத விடயங்கள் தொடர்பாக தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் நிறைவேற்றுக் குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

---

## பிரதேச அரச சேவைகள் விளையாட்டுச் சங்கத்தின் செயற்பாட்டுக் குறிப்பு.

01. இவ்விளையாட்டுச் சங்கத்தின் பெயர்.................. (பிரதேச அரச சேவைகள் விளையாட்டுச் சங்கமெனப்படும்.) எதிர்காலத்தில் இது சங்கம் என அழைக்கப்படும்.

02. முகவரி-தற்போது சங்கம் நடாத்தப்படும் இடத்தின் முகவரியே இச்சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரி ஆகும்.

03. நோக்கங்கள்

1. அரச உத்தியோகத்தர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் விளையாட்டில் பங்கெடுக்கச் செய்வதன் மூலம் உடல்,உள ஆரோக்கியத்தை வளர்த்தல்.

2. ...............மாவட்ட அரச சேவைகளின் விளையாட்டுச் சங்கங்களுடனும்,ஏனைய விளையாட்டுச் சங்கங்களுடனும் அன்னியோன்னியமாகத் தொடர்பு கொள்ளுதல்.

3. மாவட்ட தரத்திலும் மேற் தரங்களிலுமான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளத் தக்கதாக அனைத்து உறுப்பினர்களையும் ஊக்குவித்தல்.

4. பிரதேச மட்டத்திலான போட்டியிடுகின்றதும் போட்டியிடாததுமான விளையாட்டுகளை ஒழுங்கு செய்து மாவட்ட,மாகாண தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளிலும் அவர்களை பங்கெடுக்கச் செய்தல்.

5. மேற்குறிப்பிட்ட போட்டிகளுக்காக குழுக்களை அமைத்தலும் அவர்களுக்கு பயிற்சி அளித்தலும்.

6. விளையாட்டுப் போட்டிகளின் அமைப்பாளர்களுக்கும் விளையாட்டுத்துறை ஆலோசகர்களுக்கும் பயிற்சி பெறுபவர்களுக்கும் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களுக்குமான பாடநெறிகளை நடாத்துதல்.

7. விளையாட்டினதும் உறுப்பினர்களினதும் முன்னேற்றத்தின் பொருட்டு சம தரமான விளையாட்டு இயக்கங்களோடு ஒன்றுபட்டு இயங்குதல்.

8. சங்கத்தின் தேவைக்காக அசைவுறு சொத்துகளை அல்லது அசைவுறா சொத்துகளை கொள்வனவு செய்தல்.வாடகைக்கு பெறுதல்.பரிசான முறையில் அல்லது வேறு வழியில் சுவீகரித்தலும் மேற்படி விற்பனவு வாடகைக்கு கொடுத்தல்,அடைவு செய்தல் அல்லது மற்றொரு வழியில் விடுவித்தல்.

9. வேறு நிறுவனங்களிலிருந்து/கழகங்களிலிருந்து கிடைக்கப் பெறும் நிதி உதவிகளை பெற்றுக் கொள்ளுதல்.

04. அங்கத்துவம்

சங்கத்தின் அங்கத்துவம் பிரதேச சேவை விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் சந்தாப் பணம் முழுமையாகச் செலுத்தப்பட்ட பின்பு நிறைவேற்றுக் குழுவின் அனுமதியின் கீழ் அவர்களுக்கு அங்கத்துவம் வழங்கப்படும் உறுப்பினர்கள் அனைவரும் வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் போது ஒரு வாக்கை மட்டுமே பாவிக்கப்பட வேண்டும். வருடாந்த பொதுக் கூட்டமானது 10 உறுப்பினர்களுக்கு குறையாதவர்களை கொண்டிருத்தல் வேண்டும். அங்கத்தவர்களாகக் கோர விரும்புவோர் விண்ணப்பப் பத்திரம் மற்றும் உதவுதொகையை முறைப்படி செலுத்தியே கோரல் வேண்டும். விண்ணப்பம் சங்கத்தின் தலைவராலும் செயலாளராலும் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும்.

05. நிதியம்

அனைத்து சங்கங்களும் வருடாந்தம் உதவு தொகை செலுத்தப்பட வேண்டியதுடன் அத்தொகை வருடாந்த பொதுக்கூட்டத்தில் தீர்மானித்தல் வேண்டும்.

நிதி ஆண்டானது ஆண்டின் சனவரி மாதத்தில் 01 ஆந் திகதி ஆரம்பித்து டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைதல் வேண்டும். உதவு தொகையை அடுத்த ஆண்டின் சனவரி 01 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னதாக செலுத்த வேண்டு

06. பதவியிலிருந்து விலகுதலும் நீக்கம் செய்தலும்

எவரேனும் ஒரு உறுப்பினர் அல்லது ஒரு சங்கம் கழகத்திலிருந்து விலக உத்தேசிக்குமிடத்தில் இறுதியாக சந்தாப் பணத்தை செலுத்திய ஆண்டின் 31ஆம் திகதிக்கு முன்பாக அது பற்றி கழகத்தின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இல்லாவிடில் அச்சங்கமானது அடுத்த ஆண்டிற்காகவும் உதவு தொகை செலுத்த உடன்படுதல் வேண்டும். கழகத்தின் சட்ட விதிகளுக்கு முரணாக அல்லது எதிரான முறையில் நடந்து கொள்ளும் உறுப்பினர்களின் அங்கத்துவம் நீக்கப் படலாம்.

07. ஆலோசகர், உப ஆலோசகர்

கழகத்தில் ஆலோசகர் ஒருவரும் துணை ஆலோசகர்கள் மூவரும் இருக்க வேண்டியதுடன் அவர்கள் வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் போது பிரதேசத்தைச் சேர்ந்த சிரேட்ட உத்தியோகத்தர்களிலிருந்து நியமித்தல் வேண்டும்.

08. உத்தியோகத்தர்கள் தொகுதி

கழகத்தின் உத்தியோகத்தர்கள் தொகுதி இவ்வாறு அமைதல் வேண்டும்.

தலைவர்
உபதலைவர்கள் 3 பேர்
செயலாளர்
உதவிச் செயலாளர்
பொருளாளர்
உதவிப் பொருளாளர்
குறிப்பாளர்
குழு உறுப்பினர்கள் 10

உத்தியோகத்தர்களும் குழுவின் உறுப்பினர்களும் வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது தெரிவு செய்யப்பட வேண்டியதுடன் ஒரு பதவியில் ஆகக் கூடுதலாக 03 வருடக் காலத்துக்கு மீண்டும் தெரிவு செய்து நியமிக்கப்படல் வேண்டும். மேலும் ஒரு வருடக் காலத்தின் பின் அதே பதவிக்கு மீண்டும் நியமிக்கக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

எவரேனும் ஒரு உத்தியோகத்தர் மற்றும் குழு உறுப்பினர் தொடர்பிலாக வெற்றிடங்கள் ஏற்படுமிடத்து நிறைவேற்றுக் குழுவின் அபிப்பிராயப்படி அதை நிரப்ப முடியும்.

09. வருடாந்த பொதுக் கூட்டம்

நிதி ஆண்டு முடிவு பெற்று 2 மாதங்களினுள் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற வேண்டும். அதே போல்,

1. கடந்த ஆண்டிறுதி பொதுக்கூட்ட அறிக்கையை சமர்ப்பித்து அனுமதிக்கப்படல்.
2. ஆண்டு இறுதி அறிக்கை சம்மதிக்கப்படுதல்.
3. திசெம்பர் 31ஆந் திகதி முடிவுற்ற கடந்த ஆண்டிற்கான வருடாந்த கணக்குப் பிரகடனத்தையும் ஐந்தொகையையும் அனுமதிக்கப்படல்.

13/94

5. கணக்காய்வாளர்களை நியமித்தல்

6. ஆலோசகர்களையும் உதவி ஆலோசகர்களையும் தெரிவு செய்தல்.

10. <u>விசேட பொதுக் கூட்டம்</u>

விசேடமான முறையில் செய்யப்பட்ட ஒரு கோரிக்கையை மட்டும் கவனத்திற்
கொண்டு பார்ப்பதற்காக உறுப்பினர்களான சங்கத் தொகையில் 1/3க்கு
குறையாத தொகையினரால் செய்யப்பட்ட கோரப்பட்ட ஏதேனும் ஒரு
கோரிக்கை இருப்பின் பொதுக் கூட்டத்தை கூட்ட வேண்டும். வேண்டுகோள்
விடுவித்த திகதி முதல் ஒரு மாத காலத்திற்குள் பொதுக்கூட்டம் கூட வேண்டி
யதுடன் அவ்விடயத்தை விட வேறு விடயங்கள் பற்றி அதில் பேச்சு வார்த்தைகள்
நடாத்துதல் ஆகாது.

11. <u>நிறைவேற்றுக் குழுக் கூட்டம்</u>

நிறைவேற்றுக் குழுவானது குறைந்த பட்சம் மாதத்தில் ஒரு முறையாவது கூட
வேண்டியதுடன் கழகத்தின் நாளாந்த நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதில்
பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

எல்லா அம்சங்களாலும் கழகத்தின் நடவடிக்கைகளை சிறந்த முறையில் வழி
நடத்துவதிலும் முன்னேற்றுவதிலும் நிறைவேற்றுக் குழு பொறுப்பாக இருத்தல்
வேண்டும்.

12. <u>துணைக்குழுக்கள்</u>

நிறைவேற்றுக் குழுவானது தேவைப்படும் சந்தர்ப்பங்களில் குழுவின் உறுப்பினர்
களைக் கொண்ட துணை குழுகளை நியமிப்பதையும் சங்கங்களை உறுப்பினர்களாக்
பெயரிடுவதையும் செய்ய வேண்டும்.

13. <u>கூட்டங்களை நடாத்துதல்.</u>

வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெறும் இடமும் திகதியும் நிறைவேற்றுக்
குழுவினால் தீர்மானித்தல் வேண்டும். நிறைவேற்றுக் குழுவினதும் துணைக்குழுவினதும்
அடுத்த கூட்ட திகதியும் இடமும் நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானித்தல் வேண்
டும். எல்லாக் கூட்டங்களினதும் நிறைவெண்ணானது உறுப்பினர்களின் எண்ணிக்கையில்
30%உம் இன்னும் ஒருவருமாக இருத்தல் வேண்டும்.

கூட்டத்தின் அறிவித்தலும் நிகழ்ச்சி நிரலும் உறுப்பினர்களுக்கு அறிந்து கொள்ளக்
கூடிய ஒழுங்கைச் செய்ய வேண்டும். வருடாந்த பொதுக் கூட்டத்திலாயின் ஒரு
மாத காலத்திற்கு முன்னதாக அவ்வாறு அறிவித்தல் வேண்டும். மற்றக் கூட்டங்
களின் போது குறைந்த பட்சம் கூட்டத்துக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக
அறியக் கொடுக்க வேண்டும்.

14. <u>செயற்பாட்டுக் குறிப்பை செயற்படுத்துதல்/செயற்பாட்டுக் குறிப்பை திருத்துதல்</u>

இச் செயற்பாட்டுக் குறிப்பானது கழகத்தின் ஆரம்பத்தோடு செயற்படும். இச்
செயற்பாட்டுக் குறிப்பில் அடங்கிய ஏதேனும் ஒரு பிரிவு, ஒரு பிரிவின் ஒரு பகுதி
ஒரு ஒழுங்கு விதி அல்லது ஒரு துணை விதி நீக்கப்படுதல் அல்லது திருத்தம் செய்
தலோ புதிதாக அறிமுகப்படுத்தவுள்ள ஒரு பிரிவு ஒரு துணை விதி அல்லது ஒரு
விதியினை வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது அல்லது செயற்பாட்டுக் குறிப்பை
திருத்துவதற்கான கூடிய பொதுக் கூட்டத்திற்கு சமுகமளித்த மொத்த உறுப்பி
னர்களில் வாக்களிப்பதற்கு தகுதியுடையவர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத
மேல் வாக்குகளினால் அனுமதிக்க வேண்டும். ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில்
விசேடமான ஏற்பாடுகள் இல்லாவிடின் நிறைவேற்றுக் குழுவின் தீர்மானம் வருடாந்
பொதுக்கூட்டத்திலோ அல்லது செயற்பாட்டுக் குறிப்பை திருத்துவதற்காக விசேட
மாக கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தின் போது திருத்தும் வரை இறுதித்தீர்மான
மாக இருத்தல் வேண்டும்.